அருள் தரும் இமயம்


# திருக்கல்யாணத்தாய்

மலர் : 5 இதழ் : 6 ஜூன் – 2014

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

thirukkalyanamatha.com

## "...என்னிடம் கற்றுக் கொள்ளுங்கள்..."



# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com



ஆசிரியர் & வெளியிடுபவர்

அருட்திரு. R. **ஜோசப் ரவிபாலன்**

ஆலோசகர் குழு

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட் சகோதரி. புளோரா

ஆசிரியர் குழு

அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்

விளம்பரம்செய்ய
தொடர்புகொள்ள
04639-261330
04639-261230



தொடர்பு முகவரி
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| உலகத் திருச்சபை செய்திகள் | 2 |
| மறைமாவட்ட செய்திகள் | 3 |
| பங்குச் செய்திகள் | 4 |
| முதற்சனி வழிபாடு | 6 |
| சிலுவை திருச்சிலுவை | 11 |
| பங்குப்பேரவை கூட்டம் | 15 |
| மரியாயின் மாசற்ற இருதய.. | 19 |
| பதுவை புனித அந்தோணியார் | 21 |
| குட்டீஸ் கார்னர்.... | 23 |
| அசனகமிட்டி விபரம் | 28 |
| வாழ்வுதரும் வார்த்தைகள் | 30 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

# ஆசிரியரின் அருளுரை...



திருக்கல்யாணத்தாய் இதழின் ஆர்வமிக்க வாசகர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான ஆசிகளை நல்கி வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாத இதழ் கல்விச் சிறப்பிதழாக வெளிவருகிறது. கோடை விடுமுறை முடிந்து பள்ளிகளும், கல்லூரிகளும் திறக்கும் நேரமிது. மாணவர்களும் பெற்றோர்களும் சுறுசுறுப்பாக இயங்கி தமது கடமைகளைச் செய்யும் புத்துணர்ச்சி மிக்க மாதம் ஜுன் மாதம். இந்த கல்வியாண்டு முழுவதும் இறைவன் நம்மோடு கூட இருந்து நம்மை கரம்பிடித்து வழி நடத்தும்படியாக தேவ அன்னையின் வழியாக நாம் அனைவரும் வேண்டிக்கொள்வோம். நீதிமொழிகள், பிள்ளைகளே! ஞானத்தைத் தேடிப் பெறுங்கள். அது உங்களை மாண்புறச் செய்யும்.என்று நமக்கு போதிக்கிறது. ஆம்! கல்வி மனிதனுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும், ஆற்றலையும், பண்பையும் ஒருங்கே தரும் உயர்ந்த செல்வமாகும். நமது கத்தோலிக்கத் திருச்சபை தமது ஆன்மீகப்பணியோடு கல்விப் பணியையும் இணைந்து செய்துவருகிறது. குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு மிகவும் அதிகம் என்பதை உணர வேண்டும். இறைவனின் படைப்புகளில் மேன்மையானது மனித படைப்பு ஆகும். அந்த மனிதனை மாண்புள்ள மனிதனாக்குவது கல்வியே. அறிவு, ஒழுக்கம், ஆற்றல், நற்பண்பு, நல்ல பழக்கவழக்கங்கள், கடவுள் பக்தி, தேசப்பற்று என்ற பல்வேறு கொடைகளை வழங்கி மனிதனை முழு ஆளுமை உள்ளவனாக ஆக்குவது கல்வியே. நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி, 12ம் மற்றும் 10ம் வகுப்பு அரசுத் தேர்வில் 100% வெற்றியை ஈட்டியதை எண்ணி இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். தலைமை ஆசிரியை, ஆசிரியப் பெருமக்களையும், மாணவ மாணவிகளையும் பெற்றோர்களையும் மனதார பாராட்டுகின்றேன்.

கடந்த 5 ஆண்டுகளாக நமது பங்கில் சிறப்பாக பணியாற்றி நமது திருக்கல்யாணமாதா ஆலயம் திருத்தலமாக உயர்த்தப்பட காரணமாக இருந்த அருட்திரு. பபியான் ஜோசப் அடிகளார் அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்களை பங்கு மக்களோடு இணைந்து தெரிவித்துக் கொள்கிறேன். புதிய பங்கில் அவர்களது பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

அன்புடன்
**திருத்தல அதிபர்**
பொத்தக்காலன்விளை.

**இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!**



# உலகத் திருச்சபை செய்திகள்

## அமைதியிலும் மன்னிப்பிலும்......

ஆதிகால கிறிஸ்தவர்கள் அமைதியிலும் மன்னிப்பதிலும், ஏழ்மை உணர்விலும் சிறந்து விளங்கியதைப் போல நாமும் வாழவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது மறையுரையில் வெளிப்படுத்தினார். ஆதிகால கிறிஸ்தவர்கள் பொறாமை, புறம்பேசுதல் போன்ற துர்குணம் இல்லாமல் வாழ்ந்ததால் தான் அவர்கள் வாழ்க்கையில் அமைதிநிலவியதாக திருத்தந்தை அவர்கள் புனித மார்த்தா இல்ல, சிற்றாலயத்தில் நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றினார்கள்.

அன்பே அனைத்தையும் ஆட்சி செய்ததால் மன்னிப்பு அங்கே எளிதாக இருந்தது. எளிமை உள்ளம், தாழச்சி குணம் கொண்டவர்களாக இருந்ததால், போட்டி, பொறாமையற்று வாழ்ந்தார்கள். கிறிஸ்து உண்மையில் உயிர்த்தார் என நம்பும் கிறிஸ்தவர் சமூகங்கள் ஏழ்மை உணர்வைக் கொண்டவர்களாக ஏழைகள் மேல் கருணை காட்டுபவர்களாக செயல்பட வேண்டிய அவசியத்தை திருத்தந்தை அவர்கள் வலியுறுத்தினார்.

## தொந்தரவு செய்யுங்கள்...

அருள்பணியாளர்களும், ஆயர்களும் மக்களாகிய உங்களுக்கு அருள் படிப்பினைகள், வழிநடத்துதல் ஆகிய பாலை புகட்ட வேண்டுமென்று அவர்களை தொந்தரவு செய்யுங்கள் என்று திருத்தந்தை மக்களிடம் கேட்டுக்கொண்டார். அருட்பணியாளர்கள், ஆயர்கள் ஆகியோரின் இல்லக் கதவுகளையும், உள்ளக் கதவுகளையும் தொடர்ந்து தட்டுவதால் அவர்கள் இயேசுவைப்போல நல்ல மேய்ப்பர்களாக வாழும் வாய்ப்பை நீங்கள் உருவாக்குகிறீர்கள் என்று திருத்தந்தை எடுத்துரைத்தார்.

## அதிகமான கிறிஸ்தவர்கள் வாழும் நாடு...



அடுத்த 15 ஆண்டுகளில் சீனாவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்து உலகிலேயே அதிக கிறிஸ்தவர்களைக் கொண்ட நாடாக சீனா மாறும் வாய்ப்பு உள்ளதாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் கத்தோலிக்கச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. கேத்லிக் ஆன்லைன் என்ற நிறுவனத்தின் கணிப்புப்படி 2030ம் ஆண்டில் சீனாவில் 16 கோடி இவான்ஜலிக்கல் பிரிவினைச் சபை மக்களும், 8 கோடியே 70 இலட்சம் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் இருப்பார்கள்.

விரைவில் கிறிஸ்தவம் சீன அரசியலிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளது. கிறிஸ்தவம் மீது எண்ணற்ற கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ள சீனாவில் கிறிஸ்தவம் வேகமாகப் பரவி வருவதை தற்போது அரசு அதிகாரிகள் நினைத்தாலும் நிறுத்த முடியாத நிலைக்குச் சென்றுள்ளது என அந்நிறுவனம் கருத்துத் தெரிவித்துள்ளது.

–நன்றி : நம்வாழ்வு

# மறைமாவட்ட  செய்திகள்

| | |
|---|---|
| 3.5.2014 | அன்று வடக்கன்குளத்தில் வைத்து சிறுமலர் குருமட உபகாரிகள் நாள் கொண்டாட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 4.5.2014 | அன்று காலை தூத்துக்குடியில் பணி ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டுக்கூட்டமும் அன்று மாலை சிறுமலர் குருமட உபகாரிகள் நாள் கொண்டாட்டமும் மேதகு ஆயர் அவர் மூலம் நடைபெற்றது. |
| 5.5.2014 | அன்று மாலை சாத்தான்குளம் பங்கு வேலாயுதபுரம் ஆலய அர்ச்சிப்பு மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 9.5.2014 | அன்று காலை சொக்கன்குடியிருப்பு பங்கு மணல் மாதா ஆலய திருவிழா கொடியேற்றம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 10.5.2014 | அன்று காலை நான்குநேரி நற்செய்தி நகரில் குருத்துவ திருநிலைப்பாட்டு விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 11.5.2014 | அன்று காலை திரேஸ்புரம் பங்கில் திடப்படுத்துதல் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் மூலம் நடைபெற்றது. |
| 13.5.2014 | அன்று காலை வள்ளியூர் பாத்திமா மாதா திருத்தலத்தில் திருப்பலியும் அதன்பின் தூத்துக்குடி ஆயர் இல்லத்தில் மறைமாவட்ட கல்விக்குழு, பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும் மேதகு ஆயர்கள் மூலம் நடைபெற்றது. |
| 14.5.2014 | அன்று மாலை தோப்புவிளை பங்கு கல்விளை ஆலய அர்ச்சிப்பு மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 15.5.2014 | அன்று காலை கூத்தன்குழி பங்கில் திடப்படுத்துதல் திருப்பலியும், அன்று மாலை கூடுதாழை பங்கில் குருத்துவ திருநிலைப்பாடு திருப்பலியும் மேதகு ஆயர் அவர்கள் மூலம் நடைபெற்றது. |
| 28.5.2014 | அன்று காலை நட்டார்குளம் பங்கில் திடப்படுத்துதல் திருப்பலியும் அன்று மாலை மலையன்குளத்தில் மாலைஆராதனையும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 29.5.2014 | அன்று காலை மலையன்குளம் திருத்தல பெருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. |
| 31.5.2014 | குரும்பூர் பங்கு மக்களை மேதகு ஆயர் அவர்கள் நேரில் சந்தித்து உரையாடினார்கள். |



நன்றி– மறைமாவட்ட செய்திகள்




# வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம்!!



**எங்கள் திருக்கல்யாணமாதா திருத்தலத்தில் பங்குத் தந்தையாக இறைபணியாற்ற வருகை தந்துள்ள அருட்தந்தை. R.ஜோசப் ரவிபாலன் அவர்களை வாழ்த்துக்களுடன் வரவேற்கிறோம். திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் அவர்கள் ஆற்ற இருக்கும் திருப்பணியில் ஆண்டவரின் ஆசியும், திருக்கல்யாணத்தாயின் அன்பும் அருளும் நிறைவாய் கிடைக்க வேண்டிக்கொள்கிறோம்.**

01.05.14 மே மாத, மாதா வணக்க சிறப்பு வழிபாடுகள் ஆரம்பமாகியது.

03.05.14 பங்கின் முதல்சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றது.

04.05.14 திருநெல்வேலி, ஸ்மைல் டிரஸ்ட் மற்றும் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்திய இலவச கண்பரிசோதனை முகாம் மற்றும் கண்தான விழிப்புணர்வு முகாம் நமது மேல்நிலைப்பள்ளியில் வைத்துகாலை 8.30 மணி முதல் 1.00 மணி வரை நடைபெற்றது. மக்கள் பெருமளவில் கலந்துகொண்டார்கள்.

09.05.14. நமதுபள்ளி இந்த ஆண்டு +2 மற்றும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்றுள்ளது. தலைமை ஆசிரியை, ஆசிரியப் பெருமக்கள், மாணவ, மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஊக்கப்படுத்திய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றியும் பாராட்டுக்களும்.

11.05.14 அன்று காலை 9.30 மணிக்கு விடுமுறை வேதாகம பள்ளி மாணவ, மாணவிகளுக்கு போட்டிகள் நடைபெற்றன. காலை 10.30 மணிக்கு பங்குப் பேரவை சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. மாலை நற்கருணை ஆசீருக்குப்பின் வி.பி.எஸ் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

23.05.14 நமது பள்ளி 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% வெற்றி பெற்றுள்ளது. ஆசிரியர்களும் மாணவர்களும் பாராட்டப்பட்டனர்.

31.05.14 கடந்த 5 ஆண்டுகளாக நமது பங்கில் பணியாற்றிய அருள்திரு. பபியான் ஜோசப் அடிகளாருக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது. நமது பங்கில் உள்ள மூன்று பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும் பாராட்டு விழா நடைபெற்றது.



# தயையுள்ள கன்னிகையே!

கடவுள் விடுத்த அழைப்புக்கு அன்னை மரியா தயை நிறைந்த உள்ளத்தோடும் பதில் மொழி கூறுவதை நாம் அறியலாம்; தனது பார்வையை வற்றாத வாழ்வின் ஊற்றாகிய கருணை நிறைந்த கடவுள் மீது வைத்ததால் அவரின் செயல் களாகிய அனைத்தும் தயவும் இரக்கமும் நிறைந்ததாக உருமாறியது நமது பார்வையை அழிந்து போகும் உலகச் செல்வம்மீது செலுத்தாமல் அழியாத கிறிஸ்துவின் பாடுகள் மீதும் சிலுவை மீதும் செலுத்தும்போது நமது வாழ்வின் செயல்பாடுகள் தயை நிறைந்ததாக வெளிப்படும்

மனிதரின் தேவையைப் புரிந்து அறிந்து உணர்ந்து அதை நிறைவேற்றத் துடிக்கும் ஒரே தாய் நம் அன்னை அவரே தயை நிறைந்த அன்னை மரியா கானாவூர் திருமணத்தின்போது திராட்சை இரசம் தீர்ந்துபோனது இதனால் வீட்டின் உரிமையாளர் கவலையுடனும் என்ன செய்வதென்று தெரியாத குழப்பத்திலும் இருந்தார் இந்த அவல நிலை மாறி இழிநிலை மறைந்து ஒரு புதிய சூழ்நிலை உருவாக வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்டு அவர்கள் மீது தயவுகூர்ந்து தம் மகனிடம் மரியா பரிந்து பேசுகிறார் இயேசு கிறிஸ்துவும் தந்தையாம் கடவுளிடம் வேண்டி தண்ணீரைத் திராட்சை இரசமாக மாற்றி ஒரு அற்புதமான நிகழ்வை நடத்துகிறார் இவ்வாறு இயேசுவின் புதுமைக்கும் மணவீட்டாரின் இழிநிலை மாறி அனைவரும் உபசரிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது அன்னை மரியா.

தயையுள்ள அன்னையிடம் நம்பிக்கை கொண்டு அவரைத்தேடிவரும் குறையுள்ள பக்தர்கள் நிறைவுள்ளவர்களாக மாறுவார்கள் துன்பம் நிறைந்தவர்கள்; அவை நீங்கப்பெற்று இன்பம் பெற்றுச்செல்வார்கள் வெறுப்போடு வாழும் மனிதர்கள் அன்புள்ள இதயம் கொண்டு செல்வார்கள். பாவத்தால் வாடுபவர்கள் இறைவனின் மன்னிப்பை அன்னை வழியாகப் பெற்றுச்செல்வார்கள் மனிதர்களின் கொடிய செயல்களாலும் பாவம் நிறைந்த இவ்வுலகம் இன்னும் இயங்குகிறது என்றால் அது அன்னை மரியாவின் தயை மிகுந்த அன்பால் மட்டுமே என்பது திண்ணமாகும்;

எங்கேல்லாம் கடவுள் தரும் மீட்பை நாம் உணர்கிறோமோ அங்கெல்லாம் இறை அன்பையும் அன்னையின் தயவையும் நாம் அறியலாம் யாரெல்லாம் நோய் நீங்கப்பட்டு வறுமை அகலப்பட்டு வசந்தமான வளமான வாழ்வும் ஆரோக்கியமான வாழ்வும் பெறுகிறார்களோ அவர்கள் இறைவனுக்கும் அன்னை மரியாவுக்கும் நம்பிக்கையுடையவர்களாக நன்றியுடையவர்களாக வாழ வேண்டும் மரியா போன்று அனைவருக்கும் இரக்கம் காட்டுவோம் இரக்கம் பெறுவோம் அதற்கான வரத்தைத் தயை நிறைந்த அன்னையிடம் மன்றாடுவோம்!

- நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**

# முதல் சனி வழிபாடு 03.05.2014



திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் மே மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 03.05.2014 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு. **ப்ரிடி** அடிகளார் குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை மலையாளத்திலும் அருட்திரு.**பீட்டர்பால்** அடிகளார் தமிழிலும் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. சப்பரப் பவனியின்போது மலையாளத்திலும், தமிழிலும் பாடல்கள் பாடப்பட்டது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு **பபியான் ஜோசப்,** அடிகளார், அவர்கள் தலைமையில், அருட்திரு. **பீட்டர் ராஜா** அருட்திரு. **பங்கராஸ்,** அருட்திரு.**ரெத்தினராஜ்** அருட்திரு.**ஜான்போஸ்கோ** அருட்திரு.**பிரிட்டோ,** அருட்திரு. **A.S.ராஜா,** அருட்திரு. **கிஆரோக்கியராஜ்,** அருட்திரு.**ஜெகதீஸ்,** அருட்திரு. **சந்திஸ்டர்** அருட்திரு. **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**பீட்டர் பால்** அடிகளார் தமிழிலும், அருட்திரு.**ப்ரிடி** அடிகளார் மலையாளத்திலும் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **200** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10500** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **டேவிட் வளன்** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** அவர்கள் தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மாலை ஆராதனையும் நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**



## அருள்தரும் இமயம்
# திருக்கல்யாணத்தாயின்
# அற்புதங்கள்...
## சாட்சிகள்...

திருமண காரியங்கள் நல்லமுறையில் நடைந்தமைக்கு நன்றி.
**– ஆனந்தராஜ் மனோகரி,** இடிந்தகரை

குழந்தை பாக்கியம் கிடைத்ததற்காக நன்றி, **– வின்சினா ஜென்சன்,** சென்னை

நினைத்த காரியம் நடந்ததற்காக நன்றி, **– ராயன் பெலிடா,** சென்னை

திருமணம் நல்லபடியாய் நடந்ததற்காக நன்றி. **– சந்தியாஸ்,** ராமேஸ்வரம்

குழந்தை வரத்திற்காக நன்றி. **– ஜெர்மிக்,** பெரிய காடு

அனுஷா திருமணத்திற்காக அன்னைக்கு நன்றி.
**– ஜஸ்டின்ராஜ்-ஜூலியட்,** பொற்பை

மகளுக்கு திருமண வரம் கிடைத்மைக்கு நன்றி
**– ஆல்பர்ட் அந்தோணிசாமி,** சோமனூர்.

திருமணகாரியம் நல்லபடியாக நடந்தமைக்கு நன்றி. **ஆனந்த்,** கூட்டப்புளி.

மகளின் திருமண காரியம் நல்லபடியாய் நடந்து முடிந்ததற்கு அன்னைக்கு நன்றி.
**– ஜெய மணி,** சென்னை

திருமண காரியம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி.
**– அந்தோணிசாமி ராஜேஸ்வரி,** குரும்பூர்.

மேற்படிப்பு படிக்க இடம் கிடைத்தமைக்கு நன்றி. **– பெர்வின் ஜோஸ்,** குளித்துறை

திருமணகாரியம் நல்லபடியாக நடந்தமைக்கு நன்றி.
**– ஜெயலியோ பென்சர் ஆன்டனி விமலா,** கோவளம்.

அறுவை சிகிச்சை நல்லபடியாக நடந்தமைக்கு நன்றி. **– பிரான்சிஸ்,** விழிஞம்.

திருமண வரம் கிடைத்தமைக்கு நன்றி. **– ஆன்றனி,** கீழக்கரை.

நல்லதொரு இல்லம் அமைந்ததற்கு நன்றி, **– சரோஜா,** ராஜமங்கலம்

திருமணகாரியம் நல்லபடியாக நடந்தமைக்கு நன்றி.
**– ஜெபஸ் ஜோ சகாய தீபன்,** வாழைத்தோட்டம்.

குடும்பத்தில் கேட்ட வரம் கிடைத்தமைக்கு நன்றி.
**– மாற்கு மரியசெல்வம்,** சென்னை

4வருடங்களுக்குப் பிறகு குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி.
**– ராஜாசெல்வி,** அடைக்கலாபுரம்.

+2 தேர்வில் 1000க்கும் மேல் மதிப்பெண் கிடைத்தமைக்கு நன்றி.
**– டே. கீர்த்திகா,** வெள்ளக்கோவில்

குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி. **– பட்டுபுஷ்பா,** பொற்பை

திருமணகாரியம் நல்லபடியாக நடந்தமைக்கு நன்றி.
**– இப்சன் துறை, மெரிலா,** நாகர்கோவில்

+2 தேர்வில் 1111 மதிப்பெண் கிடைத்தமைக்கு நன்றி. **– மரிய ஆஸ்டின்.**




# நன்றிகள் பலகோடிகள்
# 03.05.2014 முதல்சனி
# உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| S. ராஜேந்திரகுமார், திசையன்விளை | 100.00 |
| வின்ஸ்லின் சிபோரா, பொற்பை | 2500.00 |
| தினகராஜ், கட்டாரிமங்கலம் | 500.00 |
| சந்தணம், கட்டாரிமங்கலம் | 50.00 |
| சச்சின், அன்னூர் | 500.00 |
| சேவியர், சாத்தான்குளம் | 100.00 |
| ஆல்வின்ராஜ், நாகர்கோவில் | 550.00 |
| வெங்கடேஷ், கார்த்திநகர் | 101.00 |
| டேவிட் ஜாண், நாகர்கோவில் | 500.00 |
| ரெஜினாள்மேரி, பொற்பை | 100.00 |
| வெலிங்டன் அப்ஸல்யா | 4000.00 |
| சந்தணசிலுவை, வ.இலங்குளம் | 501.00 |
| ராஜேஷ் கென்சி, | 3000.00 |
| A. வசந்தி, திசையன்விளை | 200.00 |
| லூக்காஸ் மளிகை. திருப்பூர் | 1000.00 |
| சிலுவை அந்தோணி கனி. பொற்பை | 200.00 |
| அந்தோனிகுரூஸ் மேரி, பொற்பை | 300.00 |
| S.K. ராஜ், பொற்பை | 100.00 |
| சுவாமிநாதன், பொற்பை | 200.00 |
| D. எட்வர்ட் லாரன்ஸ், பொற்பை | 500.00 |
| ஜெரின் ஸ்டோர், உடன்குடி | 300.00 |
| ஜெபாஸ்டின் ரெனிஷா, மதுரை | 500.00 |
| அந்தோணிராஜ், பொற்பை | 500.00 |
| ஜெயராஜ், பொற்பை | 500.00 |
| பொன்னரசி செல்வராஜ், மடத்துவிளை | 500.00 |
| G.T.M. அந்தோணி செல்வன், சாத்தை | 1000.00 |
| அந்தோணி ராஜ், கோவில்பட்டி | 1000.00 |
| சுரேஷ் பாண்டியன் | 100.00 |
| ஜார்ஜ் | 100.00 |
| M. நிஷாந்த், களிகை | 1000.00 |
| தொம்மை, இடிந்தகரை | 1001.00 |
| அலேசியார், திருத்துவபுரம் | 1000.00 |

| | |
|---|---|
| **S.** ஏசுவடியான், பொற்பை | 100.00 |
| **A.B.** ஜெபன்ஸி, அழகன்பாறை | 300.00 |
| **M.** ஆரோக்கிய சுதாகர், கொழுந்தட்டு | 200.00 |
| **S.** அலெக்ஸ், பொற்பை | 1000.00 |
| | 24603.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| காமராஜ் டெய்சி ராணி, பொற்பை | 10000 சாப்பாடு பிளேட் |
| அன்னையின் அடிமை | பீடப்பூக்கள் |
| ஹாசன் பஸ் நன்கொடையாக | காய்கறி வாடகை |
| தாசன், மாடத்தட்டுவிளை | தேங்காய் 10 |
| மரியசூசை. மாடத்தட்டுவிளை | தேங்காய் 5 |
| அதிர்ஷ்டம் ஜெயந்தி, உவரி | அரிசி 25 கிலோ |
| ஜெயினம்மாள், மாணிக்கபுரம் | கிடா 1 |
| தினேஷ் அன்வர், புன்னக்காயல் | அரிசி 25 கிலோ |
| எட்வின் தன்ராஜ், பிரகாசபுரம் | கருப்புகட்டி 1 கிலோ |
| குமார் ஜெகன், ராஜாவூர் | அரிசி 25 கிலோ |
| ஜார்ஜ் ராணி, வீரபாண்டியன்பட்டணம் | அரிசி 25 கிலோ |
| பெயர்விரும்பாத நபர், | அரிசி 3 மூடை |
| பெயர் விரும்பாத நபர் | அரிசி 1 மூடை |
| ஜஸ்டின், சென்னை | அரிசி 1 மூடை |
| ஜெரோம் குயிண்டின், கவரப்பேட்டை | அரிசி 1 மூடை |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| ஜெரால்டு விஜி, மும்பை | அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |
| செல்லபெருமாள் அனிதா, நெய்வேலி | அரிசி 25 கிலோ |
| சார்லஸ் சுபாலின், கன்னியாகுமரி | அரிசி 25 கிலோ |
| ஜோர்னிஷ், உவரி | அரிசி 25 கிலோ |

### முதற்சனி மதிய உணவு செலவு விபரம் :

| | |
|---|---|
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| யோவான் சமையல் குழு | 13000.00 |
| சேசு ஜெயராஜ மற்றும் பணியாளர்கள் | 5335.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை | 4845.00 |
| ஜோசப் மளிகை | 70790.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் நடை | 2000.00 |
| இம்மான் தண்ணீர் லோடு வண்டி வாடகை | 2100.00 |

| | |
|---|---|
| அலைக்ஸ் விறகு 40 எடை | 6000.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் 200 | 1180.00 |
| ரூபேஸ் குமார் கத்தரிகாய் 255கிலோ | 3140.00 |
| சகாய செல்வன் உணவு விடுதி | 600.00 |
| இருதயராஜ் ரூபிஸ்டார் அரிசி 11/2மூடை | 5125.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 980.00 |
| | ------------- |
| மொத்தம் | 117995.00 |

| | | |
|---|---|---|
| முன் இருப்பு வங்கியில் | - | 15540.00 |
| நன்கொடை வரவு | - | 24603.00 |
| பங்குத் தந்தைமூலம் வரவு | - | 93000.00 |
| கையில் | | 791.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | - | 3000.00 |
| மொத்தம் | - | 136934.00 |
| செலவு | - | 117995.00 |
| மொத்த இருப்பு | - | 18939.00 |

| | | |
|---|---|---|
| வங்கியில் | - | 18540.00 |
| கையில் | - | 399.00 |
| இறுதி மொத்த இருப்பு | - | 18939.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.03.14 அன்று இருப்பு | 133527.00 |
| 01.04.14 முதல் 30.04.14 வரை விற்பனை | 124050.00 |
| மொத்தம் | 257597.00 |
| 01.04.14 முதல் 30.04.14 வரை செலவு | 131952.00 |
| மொத்தம் | 125645.00 |
| வங்கி வட்டி வரவு | 8557.00 |
| 30.04.13 அன்று இருப்பு | 134202.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# சிலுவை திருச் சிலுவை

புனித பிரான்ஸிஸ் சவேரியார் ஒருமுறை கப்பலில் பயணம் செய்து கொண்டிருநதார் அவர் எப்போதும் ஒரு மரச் சிலுவையைக் கழுத்தில் அணிந்திருப்பார் அவரோடு பயணம் செய்து கொண்டிருந்தவர்களிடம் ஆண்டவரின் மகத்துவத்தைப் பற்றி பேசிக் கொண்டேயிருந்தார் அவர்களோ அவரின் ஏழைக் கோலத்தையும் அவர் கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த மரச்சிலுவையையும் பார்த்து மிகக் கேவலமாக பரிகசித்து அவரோடு பயணித்து வந்தனர் திடீரென்று கடல் பயங்கராமாகக் கொந்தளிக்க ஆரம்பித்து அனைவரும் உயிருக்குப் பயந்து கூச்சலிட்டனர். அந்தத் சூழ்நிலையிலும் அவர்கள் சவேரியாரிடம் இந்தச் சிலுவை உம்மையும் எங்களையும் காப்பாற்ற முடியவில்லையே நாம் அனைவரும் சாகப் போகிறோமே நீர் என்ன சொல்லப் போகிறீர் என ஏளனம் செய்தனர்

ஆனால் சவேரியாரோ அமைதியாக கண்களை மூடி சிறிது நேரம் ஜெபித்து விட்டுத் தன் கழுத்தில் அணிந்திருந்த அந்த மரச்சிலுவையை கையில் எடுத்து தண்ணீரில் படும் படியாகக் காட்டி இயேசுவைப் போலவே காற்றை அதட்டி கடலைப் பார்த்து இயேசுவின் நாமத்தில் உனக்குச் சொல்கிறேன். இரையாதே என்றார். உடன் கடல் அமைதியாற்று அனைவரும் பத்திரமாக கரை வந்து சேர்ந்தனர் ஆனால் அந்த சிலுவையோ அலையில் மூழ்கி விட்டதால் புனிதரின் உள்ளம் அந்தச் சிலுவையை நாடி அலை மோதியது.



சவேரியார் கடற்கரையில் முழங்கால் படியிட்டு தம்மைக் கடல் கொந்தளிப்பிலிருந்து காப்பாற்றியதற்காக சிலுவை நாதருக்கு நன்றி சொல்லி அந்த மரச் சிலுவை தனக்குக் கிடைக்க வேண்டும் என்று இறைவனிடம்; ஜெபித்துக்கொண்டிருந்தார் அப்போது பெரிய நண்டு ஒன்று தன் வாயில் அம்மரச் சிலுவையைக் கவ்விக்கொண்டு வந்து புனிதர் முன் வைத்து விட்டுச் சென்றது இதைப் பார்த்துக் கொண்டிருந்த அம்மக்கள் அனைவரும் வாயடைத்து தங்கள் ஏளனப் பேச்சுக்கு மனம் வருந்தி சிலுவை நாதருக்கு முன் மண்டியிட்டுச் ஜெபித்தார்கள் என சரித்திரம் சான்று கூறுகிறது இன்றும் இச்சம்பவம் பற்றி கோவா கடற்கரையில் பேசப்பட்டு வருகிறது

தி.பா 20:7-8 ''சிலர் இரதங்களைக் குறித்தும் சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள் நாங்களோ எங்கள் தேவனாகிய இயேசுவின் நாமத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிறோம் அவர்கள் முறிந்து விழுந்தார்கள் நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்" என்கிறார் சங்கீதக்காரர் ஆகவே கிறிஸ்துவுக்கும் கிறிஸ்து என்ற சிலுவையை நமக்கு இந்த மாய உலகித்திலிருந்தும் பாவ சாபங்களிருந்தும் துன்பங்களிருந்தும் நாம் காப்பாற்றப்பட்ட நமக்காகப் பாடுபட்ட அவர் சிலுவையைச் சுமந்த பாதையை விசுவசித்து மனந்திருந்தி சிலுவையின் எதிரியான அலகையை வெல்ல தியானிப்போம் திருக்கல்யாண அன்னை நம்மை ஆசீர்வதிப்பாராக ஆமென்

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**03-05-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1474 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1320 பேர் |
| சுகப்பிரசவம் | - | 978 பேர் |
| நற்சுகம்பெற | - | 1702 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 458 பேர் |
| தேவஅழைத்தல் | - | 897 பேர் |
| வேலைகிடைக்க | - | 1044 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1102 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1702 பேர் |
| குடும்பநலன் | - | 1208 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1703 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1045 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1125 பேர் |
| மனஅமைதிக்காக | - | 948 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 859 பேர் |
| மனமாற்றமடைய | - | 945 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1005 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 732 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 985 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 973 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 735 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

# இதய அஞ்சலி

| | | | |
|---|---|---|---|
| 1. | **S.** அந்தோணி சவரிமுத்து | பொற்பை | 27.04.14 |
| 2. | **V.** மரிய சற்குணம் | பொற்பை | 01.05.14 |
| 3. | **D.** சூசை அந்தோணி | பொற்பை | 13.05.14 |
| 4. | **V.** சிலுவைமரியம்மாள் | பொற்பை | 30.05.14 |

# வாழ்த்துகிறோம்

நானிலத்தில் கிறிஸ்துவும் திருச்சபையும் போல அன்பும் அறனுமாய் என்றும் எடுத்துக்காட்டாய் இனிது வாழ வாழ்த்துகிறோம்!

| | | |
|---|---|---|
| 08.04.14 - | **வினோத்குமார் – ராஜேஸ்ஹென்சி** | பொற்பை |
| 05.05.14 - | **ஆரோக்கியசெல்வன்–ராஜேஸ்வரி** | பொற்பை |
| 12.05.14 - | **அருண் – மரியபெவினாள் புஷ்பா** | பொற்பை |
| 12.05.14 - | **சுரேஷ் செல்வத்துரை–வினிபாரோஸ்** | பொற்பை |
| 12.05.14 - | **ஜஸ்டின்ராஜ் – ஜூலியட் அனுஷா** | பொற்பை |
| 12.05.14 - | **ஜோஸ்விஜயன் – எட்வின்விஷுங்டா** | பொற்பை |
| 12.05.14 - | **அந்தோணிதுரை–தேவகல்யாணி** | பொற்பை |

# இந்திய நதிக்கரை நகரங்கள்

| | | | |
|---|---|---|---|
| ஆக்ரா | யமுனா | நாசிக் | கோதாவரி |
| அலகாபாத் | யமுனா கங்கா | பாட்னா | கங்கை |
| கொல்கத்தா | ஹீக்ளி | ஸ்ரீநகர் | ஜீலம் |
| கட்டாக் | மகாநதி | சூரத் | தப்தி |
| டெல்லி | யமுனா | வாரணாசி | கங்கை |
| ஜாம்ஷெட்பூர் | சுபர்ணரேகா | ரிஷிகேஷ் | கங்கை |
| ஹைதராபாத் | முஸி | அயோத்யா | சரயு |
| ஹரித்வார் | கங்கை | விஜயவாடா | கிருஷ்னா |
| ஜபல்பூர் | நர்மதா | தஞ்சாவூர் | காவிரி |
| லக்னோ | கோமதி | மதுரை | வைகை |
| லூதியானா | சட்லஜ் | நெல்லை | தாமிரபரணி |

# நேரத்தை ஒதுக்கிடுங்கள்.....

**சிரிப்பதற்கு நேரம் ஒதுக்கிடுங்கள் – அது இதயத்தின் ஓசை**
**சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்கிடுங்கள் – அது சக்தியின் இருப்பிடம்**
**விளையாட நேரம் ஒதுக்கிடுங்கள் – அது இளமையின் ஊற்று**
**நட்புக்கு நேரம் ஒதுக்கிடுங்கள் – அது மகிழ்ச்சியின் வழி**
**உழைக்க நேரம் ஒதுக்கிடுங்கள் – அது வெற்றியின் விலை**
**படிக்க நேரம் ஒதுக்கிடுங்கள் – அது அறிவின் பெருக்கம்**
**ஜெபிக்க நேரம் ஒதுக்கிடுங்கள் – அது இறைவனின் நெருக்கம்**

**-L. ஜெனிஷா,** பொற்பை

# நன்றிகளும்... பாராட்டுகளும்!



எங்கள் பங்குத் தளத்தில் கடந்த 5 வருடங்களாக சிறப்பாக பணியாற்றி, தனது அயராத உழைப்பால் திருக்கல்யாணமாதா ஆலயத்தை திருத்தலமாக மாற்ற உறுதுணையாய் இருந்த திருத்தல அதிபர். T. பபியான் ஜோசப் அவர்களுக்கு நன்றி கலந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்! அவரது பணி மென்மேலும் சிறக்க எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்!!



திருத்தலப் பொதுமக்களுடன் பிரியாவிடை...



பள்ளிகளின் ஆசிரியப் பெருமக்களுடன் பிரியாவிடை...



எழுச்சி மிகு இளைய சமுதாயத்தினருடன் பிரியாவிடை...

# பங்குப் பேரவை கூட்டம்

## 11.04.2014

பொத்தக்காலன்விளை புனித திருக்கல்யாணமாதா திருத்தல பங்குப் பேரவைக் கூட்டம் பங்குத் தந்தை அருட்திரு. பபியான்ஜோசப் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

**1. இரவுக்காவலர் ராமநாதன் அவர்களுக்கு அதிகப்படியாக ரூ.500/– அதிகரித்து மாத ஊதியமாக ரூ.3000/– வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**2. துப்புரவு பணியாளர் கணேசன் மற்றும் பேச்சியம்மாள் ஆகிய இரண்டு பேர்களுக்கும் ரூ500/– அதிகரித்து மாத ஊதியமாக ரூ.4000/– வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**3. பொதுகணக்கில் இந்நாள்வரை வங்கியில் ரூ.7,88,948/– இருக்கிறது. இனி பாத்திர வாடகை கணக்கில் ரூ.1,32,358/– யும், திருத்தலக்கடையின் இருப்பு ரூ.56,312/–யும், முதல்சனி கணக்கு ரூ.18,939/–யும் பொது கணக்கில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.**

**4. எல்லா தரப்பில் உள்ள செயல்பாடுகளும் சரி செய்யப்பட்டு வரவு விவரங்களை பொது கணக்கில் வரவு செய்யப்பட வேண்டும். பாத்திர வாடகை கணக்கு, திருத்தல கடை கணக்கு, முதல் சனி கணக்கு ஆகிய அனைத்து கணக்குகளும் பொதுகணக்கில் வரவு செய்யப்பட வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது.**

**5. திரு. ஜேம்ஸ் திருத்தல கடை பொறுப்பில் இருந்து தன்னை விடுவிக்க கேட்பதால் அவர்கள் விடுவிக்கப்பட்டு திருத்தல கடைகள் சம்பந்தமான அனைத்து பொறுப்புகளும் திரு. காமராஜ் அவர்கள் எடுத்து நடத்துவார்கள். அவருக்கு துணையாக திரு. வர்கீஸ், திரு. சூசை செசன்ராஜ் ஆகியோர் செயல்படுவார்கள் என தீர்மானிக்கப்பட்டது.**

**6. நம் பங்கில் கடந்த 5 ஆண்டுகாலம் சிறப்பாக பணி செய்த நம் பங்குத் தந்தை, வேறு பங்கிற்கு மாறுதலாகி செல்வதால் அவருக்கு 31.05.2014 அன்று சிறப்பான பாராட்டுக் கூட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டது.**

**7. அசனபறைக்கு முன்பாக ஒரு செட் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.**

**8. மேல்நிலைப்பள்ளி வட பகுதியில் சைக்கிள் ஸ்டாண்ட் அமைக்க தீர்மானம் செய்யப்பட்டது.**

**9. நமது மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு & +2 வகுப்புகள் அரசுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற்றதை பாராட்டி தாளாளர் தந்தை தலைமை ஆசிரியை, ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் பலவிதத்தில் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.**

# ஏப்ரல் 2014 – வரவு செலவு விபரம்

**வரவுகள் :** முன்னிருப்பு

| | | |
|---|---|---|
| வங்கியில் ரூ.446006.00 | | |
| கையில் ரூ.969.00 | 446975.00 | |
| திருப்பலி முதல் சனி 150×70=10500 | | |
| பங்கு இல்லம்89×70=6230 | 16730.00 | |
| இதர நன்கொடைகள் | 19320.00 | |
| வீடு வாடகை | 500.00 | |
| புடவை ஏலம் | 14255.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 425460.00 | |
| பாமாலை புத்தகம் விற்பனை | 900.00 | |
| பழைய வரிகள் &கூரை வரிகள் | 34750.00 | |
| புனித வெள்ளி காணிக்கை பொற்பை 22985 | | |
| முதலூர் 500 | 23485.00 | |
| முதல் சனி கடைகள் மூலம் | 8000.00 | |
| ஞானஸ்நானம் | 500.00 | |
| மண்டப நன்கொடை | 4000.00 | |
| அடுப்புக்கரி விற்பனை | 600.00 | |
| உபதேசியார் மூலம் வரவு | 3075.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை 7130 | | |
| நவமுதலூர் 600 | 7730.00 | |
| அடக்கம்&கல்லறை | 1500.00 | |
| பள்ளிகள் மூலம் | 6024.00 | |
| மொத்தம் | 1013804.00 | |
| **செலவுகள் :** | | |
| முதல் சனி குருக்கள் படி | | 11700.00 |
| முதல் சன விளம்பர தொடர்பு எலிசபெத்&கரிஜா | | 1000.00 |
| மேக் டி;வி விளம்பரம் | | 4000.00 |
| இன்சூரன்ஸ் | | 1565.00 |
| மின்கட்டணம் | | 32097.00 |
| கெபி ஸ்டால் மெயின் சுவிட்ச் டேப் } ஜேசுதாஸ் பொருட்கள் &கூலி | | 21192.00 |
| வரவு செலவு புத்தகம் திருப்பலி கருத்துக்கள் ரசீது } பிளக்ஸ் போடு செய்ய காணிக்கை பெட்டி கீ செயின் | | 10850.00 |
| ஸ்டால் கார்பெண்டர் கூலி& பொருட்கள் | | 61339.00 |
| மேல்நிலைப்பள்ளி வழக்கு வகைக்கு செலவு | | 4000.00 |
| மேனுவல் கவர்(15) | | 15900.00 |

| | |
|---|---|
| ஆலய உண்டியல் பூட்டு சரி செய்ய | 1400.00 |
| தொடக்க பள்ளிகள் சான்றிதழ்கள் பெற | 4508.00 |
| டோபி | 465.00 |
| குளிர்பானம் &சிற்றுண்டி Fr.பபிஸ்டன் குரூப்ஸ் | 460.00 |
| புனித வாரம் தியானம் குருக்கள் படி | 2400.00 |
| தியானம் மதிய உணவு தண்ணீர் &டிபன் | 10050.00 |
| அசன மண்டப டாய்லெட் &பணிகள் | 16900.00 |
| தூத்துக்குடி பயணப்படி | 700.00 |
| மறைக்கல்வி விழா பரிசுகள் (திருத்தல கடை மூலம்) | 29707.00 |
| எரிவாயு | 442.00 |
| கார் சரிசெய்ய | 13000.00 |
| செப்டிங் டேங்க் மேனுவேல் கவர் | 7200.00 |
| வி பிஸ் புத்தங்கள் வாங்க | 1360.00 |
| அருட்தந்தை அகிலன் ஈஸ்டர் பணிகள் படி | 750.00 |
| சமையல் அம்மா தேனி பயணப்படி | 1500.00 |
| ஜல்லி 9!12 டன் | 5020.00 |
| தொலைபேசி கட்டணம் | 972.00 |
| பள்ளிகள் பராமரிப்பு | 6000.00 |
| அசன மண்டப பைப் வேலைகள் | 29061.00 |
| ஆலய பராமரிப்பு | 3500.00 |
| பெரிய வியாழன் பப்ஸ் டீ | 3600.00 |
| ஈஸ்டர் வார பூக்கள் | 2500.00 |
| பெரிய வெள்ளி பசிப்பிணி காணிக்கை | 23485.00 |
| இளைஞர் விழா!உணவு &டிபன் (300பேர்) | 27240.00 |
| சிலுவைப் பாதை டியூப் லைட் &யூத் டே செட் | 2300.00 |
| அருட்சகோரர்கள் வீடு மந்திரிப்பு படி | 2700.00 |
| சிக்கன் &மட்டன் | 540.00 |
| திருத்தல கடை பெயிண்டிங் பொருட்கள் &கூலி | 43323.00 |
| டீசல் ஜெனரேட்டர் &வாகனம் | 13003.00 |
| மருந்து | 2331.00 |
| ஸ்டேசனரி &தபால் செலவு | 1525.00 |
| உதவித் தொகைகள் | 4800.00 |
| பழங்கள் &காய்கறி | 1685.00 |
| பால்&தண்ணீர் | 2000.00 |
| மளிகை பொருட்கள் | 2972.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| இரவுக்காவலர் ஊதியம் | 2500.00 |
| துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| பங்குத்தந்தை படி | | | | 6000.00 |
| பங்குத்தந்தை திருப்பலி படி | | | | 1500.00 |
| ஆலய பொருட்கள் | | | | 1515.00 |
| கெஸ்ட் ரூம் துணிகள் | | | | 2000.00 |
| சேவை வரி | | | | 62.00 |
| திருத்தல பங்களிப்பு | | | | 10000.00 |
| புனித வரி | திருப்பலி | 5×139= | 695 | |
| | அடக்கம் | 2×7= | 14 | |
| | ஞானஸ்நானம் | 1×5= | 5 | |
| | திருப்பலி | 50×109= | 5450 | 6164.00 |
| | | | மொத்தம் | 478783.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.1013804.00 |
| மொத்த செலவு | ரூ. 478783.00 |
| இறுதியிருப்பு | ரூ. 535021.00 |
| வங்கியில் | ரூ. 532421.00 |
| கையில் | ரூ. 2600.00 |
| மொத்தம் | ரூ. 535021.00 |

– பங்குத்தந்தை

**3.5.2014 அன்று பொங்கல் வழங்கியோரர்**

